நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சென்னை–28.

# சுற்றறிக்கை

ந.க.எண்.28880/2018/டிபி3

நாள்: 04.01.2021

பொருள்: தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 – உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் – கட்டிடப்பணி தொடங்குவதற்கான அறிவிப்பு மற்றும் கட்டிட பணி முடிவு அறிக்கைகளை இணையதளம் வாயிலாக பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் – குறித்தான வழிமுறைகள் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
2. தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III, பிரிவு 1(a), நாள்.04.02.2019.

******

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, கீழ்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட பதிவு பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும், கட்டிட உரிமையாளர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

1) <u>கட்டிடப் பணி தொடங்குவதற்கான அறிவிப்பு</u> – இணைப்பு XIV-ல் குறிப்பிட்டுள்ள படிவம் எண்.2 (விதி எண்.9(1)(f))–ன் படி கட்டிடப்பணி துவங்கியவுடன் குறிப்பிடப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து https://tnurbanepay.tn.gov.in என்ற URL முகவரியில் இணையதளம் வாயிலாக சம்மந்தப்பட்ட ஆணையருக்கு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

2) <u>கட்டிட முன்னேற்ற அறிக்கை</u> – கட்டிடப்பணி துவங்கப்பட்ட பின் கட்டிட அடித்தளம் முடிவுற்ற நிலையில் (Basement / Plinth Level) படிவம் எண்.3 (விதி எண்.9(2)(l))–ன் படியும் கட்டிடத்தின் உயர்த்தளம் முடிவுற்ற நிலையில் படிவம் எண்.4 (விதி எண்.9(2)(b))–ல் குறிப்பிட்டவாறும் இணையதளம் https://tnurbanepay.tn.gov.in என்ற URL-ன் வழியாக சமர்ப்பிக்க வேண்டும்.

3) <u>கட்டிடப் பணி முடிவு அறிக்கை</u> – கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன், இணைப்பு XIV-ல் குறிப்பிட்டுள்ள படிவம் எண்.5 (விதி எண்.21(1)) மற்றும் படிவம் எண்.6, 7 & 8 (விதி எண்.20(1))–ன் படி கட்டிடத்தின் தன்மைக்கேற்றவாறு, குறிப்பிடப்பட்ட படிவத்தில்

பூர்த்தி செய்து https://tnurbanepay.tn.gov.in என்ற URL முகவரியில் இணையதளம் வாயிலாக பதிவு பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அபிவிருத்தியாளர் அல்லது உரிமையாளரால் உள்ளீடு செய்யப்பட வேண்டும்.

மேற்காணும் வழிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட பதிவு பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும், கட்டிட உரிமையாளர்களுக்கும் தெரியும் வண்ணம் விழிப்புணர்வு செய்ய வேண்டும் என அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் அனைத்து நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

**பெறுநர்**
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
**நகல்**
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.